## "நில ஆவணங்களை பதிவுத்துறையுடன் இணையவழியில் தொடர்பு படுத்துதல்" குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் 12.03.2013 அன்று ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது

மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களுக்கான மாநாட்டின் போது, 19.12.2012 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "நில ஆவணங்கள் குறித்து பல்வேறு மென்பொருள்களிடையே தொடர்பு ஏற்படுத்தப்படும்" என்று அறிவித்தார்கள். இதனை செயல்படுத்தும்விதமாக, முதற்கட்டமாக நில ஆவணங்களை இணையவழியில் பராமரிக்கவல்ல மென்பொருளை தேசீய தகவல் மையம் மூலம் உருவாக்க நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இப்பணியின் முன்னேற்றம் குறித்து, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்களுடன் 12.03.2013 அன்று ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் வருவாய்த்துறை முதன்மைச்செயலாளர், கூடுதல் தலைமைச்செயலாளர் மற்றும் வருவாய்நிருவாக ஆணையர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டத்துறையின் முதன்மைச்செயலாளர் மற்றும் ஆணையர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர், தகவல்தொழில்நுட்ப செயலாளர், பதிவுத்துறைத்தலைவர், தேசீய தகவல் மைய அலுவலர் மற்றும் மேற்படி துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

" நில ஆவணங்களை பதிவுத்துறையுடன் இணைய வழியில் தொடர்பு படுததுதல்" பணிக்குரிய வழிமுறைகள் குறித்தும், இதன்பொருட்டு உருவாக்கப்பட்டுள்ள செயல்திட்டம் குறித்தும் வருவாய்த்துறையின் முதன்மைச்செயலாளர் மற்றும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் ஆகியோர் மாண்புமிகு அமைச்சர்களுக்கு விவரித்தனர்.

நில ஆவணங்களை பராமரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் மென்பொருளான "தமிழ்நிலம்" என்பதனை இணையப்பயன்பாட்டிற்கு ஏற்புடையதாக மாற்றி அமைக்கும்பொருட்டு, தேசீய தகவல் மையம், மென்பொருள் தேவைக்குறியீடுகளுக்கான ஆவணத்தை(SRS- Software Requirement Specifications Document) தயாரித்து வழங்கியுள்ளதாகவும், இது தேசீய நிலஆவணங்களை நவீனமயமாக்கும் திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்தும் சங்கத்தின் பரிசீலனையில் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த ஆவணத்தை அரசு அங்கீகரித்ததும், இம்மென்பொருள் பரிட்சார்தமாக ஒரு மாவட்டத்திற்கு ஒரு வட்டம் வீதம் செயல்படுத்தப்படும் என அவர்கள் தெரிவித்தனர். அதே நேரத்தில் நில ஆவணங்களை இன்றைய நிலைக்கு கொண்டு வரும் (Updating) பணி சிறப்பு நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள செயல்திட்டத்தின்படி பணியினை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும் நில ஆவணங்களை இணைய வழியில் பதிவுத்துறையுடன் தொடர்புபடுத்தி பதிவுவிவரங்களை நிலஅளவை தகவல் தொகுப்புக்கு தானியங்கியாக வரச்செய்து, நில ஆவணங்களை மேம்படுத்துவதானது மக்களுக்கு பெரும் நன்மைபயக்கும் எனவும், இதன்மூலம் தவறான பதிவுகள் நடைபெறுவது போன்ற நிகழ்வுகள் அறவே நீக்கப்படும் எனவும் தெரிவித்தார். இதன்மூலம் பட்டா மாறுதல்கள் இன்னும் விரைவாக நடைபெற்று பொதுமக்கள் பயனடைவர். மேலும் இதன்மூலம் நிலநிருவாகத்தையும், நிலசீர்திருத்தையும் மற்றும் பதிவுத்துறை பணிகளையும் செவ்வனே மேற்கொள்ள இயலும் எனவும் தெரிவித்தார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**